# யூன் – 27 – வியாழன்

## தூய அலெக்ஸாந்திரியா சிரில்

## பாறையின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது. மத் 7:25

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் : தொடக்க நூல் 16:1 –12,15 - 16

அந்நாளில் ஆபிராமின் மனைவி சாராய்க்கு மகப்பேறு இல்லை. சாராய்க்கு ஆகார் என்ற எகிப்திய பணிப்பெண் ஒருத்தி இருந்தாள். சாராய் ஆபிராமிடம், "ஆண்டவர் என்னைப் பிள்ளை பெறாதபடி செய்துவிட்டார். நீர் என் பணிப்பெண்ணிடம் உறவுகொள்ளும். ஒருவேளை அவள் எனக்காகப் பிள்ளை பெற்றுத் தரக்கூடும்" என்றார். ஆபிராம் சாராயின் சொல்லைக் கேட்டார்.ஆபிராம் கானான் நாட்டில் பத்து ஆண்டுகள் வாழ்ந்தபின், அவர் மனைவி சாராய் எகிப்தியப் பணிப்பெண் ஆகாரைத் தம் கணவருக்கு மனைவியாகக் கொடுத்தார். அவர் ஆகாருடன் உறவுகொண்டபின் அவள் கருவுற்றாள். தான் கருவுற்றிருப்பதைக் கண்டதும் தன் தலைவியை அவள் ஏளனத்துடன் நோக்கினாள்.அப்பொழுது சாராய் ஆபிராமிடம், "எனக்கு இழைக்கப்பட்ட தீங்கு உம்மேல் இருக்கட்டும். நீர் தழுவும்படி நானே கொடுத்த என் பணிப்பெண், அவள் கருவுற்றிருக்கிறாள் என்பதைக் கண்டதிலிருந்து என்னை ஏளனமாக நோக்குகிறாள். ஆண்டவரே எனக்கும் உமக்கும் நீதி வழங்கட்டும்" என்றார். ஆபிராம் சாராயிடம், "உன்பணிப்பெண் உன் அதிகாரத்தின்கீழ் இருக்கின்றாள். உனக்கு நல்லதாகப் படுவதை அவளுக்குச் செய்" என்றார். இதற்குப்பின் சாராய் அவளைக் கொடுமைப்படுத்தினார். ஆகவே, ஆகார் சாராயிடமிருந்து தப்பி ஓடினாள்.ஆண்டவரின் தூதர் அவளைப் பாலைநிலத்தில் இருந்த ஒரு நீரூற்றுக்கு அருகில் கண்டார். அந்த ஊற்று சூருக்குச் செல்லும் வழியில் இருந்தது.அவர் அவளை நோக்கி, "சாராயின் பணிப்பெண் ஆகார், நீ எங்கிருந்து வருகின்றாய்? எங்கே போகின்றாய்?" என்று கேட்டார். அதற்கு அவள், "என் தலைவி சாராயிடமிருந்து நான் தப்பி ஓடுகிறேன்" என்றாள்.ஆண்டவரின் தூதர் அவளிடம், "நீ உன் தலைவியிடம் திரும்பிச் சென்று அவளுக்குப் பணிந்துநட" என்றார். பின்பு ஆண்டவரின் தூதர் அவளிடம், "உன் வழி மரபினரை யாரும் எண்ண முடியாத அளவுக்குப் பெருகச் செய்வேன்" என்றார்.மீண்டும் ஆண்டவரின் தூதர் அவளிடம், "இதோ! கருவுற்றிருக்கும் நீ ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். அவனுக்கு "இஸ்மயேல்" எனப் பெயரிடுவாய். ஏனெனில் உன் துயரத்தில் ஆண்டவர் உனக்குச் செவிசாய்த்தார். ஆனால் அவன் காட்டுக்கழுதை போல் வாழ்பவனாக இருப்பான். எல்லோரையும் அவன் எதிர்ப்பான் எல்லோரும் அவனை எதிர்ப்பார்கள். தன் உறவினருக்கு எதிரியாக அவன் வாழ்வான்" என்றார்.ஆகார் ஆபிராமுக்கு மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள். ஆகார் பெற்ற தம்மகனுக்கு ஆபிராம் "இஸ்மயேல்" என்று பெயரிட்டார்.ஆகார் ஆபிராமுக்கு இஸ்மயேலைப் பெற்றெடுத்த பொழுது அவருக்கு வயது எண்பத்தாறு.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர்.

## நற்செய்தி : மத்தேயு 7 : 21 - 29

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது :என்னை நோக்கி, "ஆண்டவரே, ஆண்டவரே" எனச்சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்.அந்நாளில் பலர் என்னை நோக்கி, ஆண்டவரே,ஆண்டவரே, உம்பெயரால் நாங்கள் இறைவாக்கு உரைக்கவில்லையா? உம்பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம்பெயரால் வல்லசெயல்கள் பல செய்யவில்லையா?" என்பர்.அதற்கு நான் அவர்களிடம், "உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" என வெளிப்படையாக அறிவிப்பேன்.ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம்வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழைபெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பெருங்காற்று வீசியது. அவை அவ்வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனெனில் பாறையின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது.நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக்கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது தம்வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பெருங் காற்று வீசியது. அவை அவ்வீட்டைத் தாக்க, அது விழுந்தது. இவ்வாறு பேரழிவு நேர்ந்தது". இயேசு இவ்வாறு உரையாற்றி முடித்தபோது அவரது போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர்.ஏனெனில் அவர்கள்தம் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு அவர்களுக்கு அவர் கற்பித்தார்.

**தியானம் :** இன்றைய வாசகங்கள் இறைவன் மீது எமக்கு எவ்வாறான அன்பும், நம்பிக்கையும் இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டுகின்றன. வாழ்க்கை என்பது ஒரு போராட்டமே. அதில் இன்பம் துன்பம் என்று இரண்டும் கலந்தே இருக்கும். இயற்கையிலேயே பல வகையான கால நிலைகள் இருப்பதுபோல் மனித வாழ்விலும் இருக்கும், இயற்கை எவ்வாறு அதனை அனுசரித்து செல்கின்றதோ அவ்வாறு நாமும் செல்ல வேண்டும், இப்போது இங்கு கோடைகாலம், இறந்தது போல் இருந்த மரம் செடி எல்லாம் துளிர் விட்டு பசுமையாக காட்சி தருகின்றன. குளிர் காலத்தில் அவை பனிக்குள் புதையுண்டு இறந்தவை போல் இருக்கும், ஆனால் அவற்றிற்கு உயிர் உள்ளது. இவ்வாறு தான் நாமும் பல வேளைகளில் இருக்கின்றோம். எமக்குள் இருக்கும் நம்பிக்கை புதையுண்டு போயிருக்கின்றது. அதனை வெளிக்கொணர வேண்டும். நற்செய்தியில் கூறப்படுவதுபோல் நிலையான அடித்தளம் இல்லாத எம் விசுவாச வாழ்வு பலவகையான புயல் காற்றால் புதையுண்டு போய்விடுகின்றன. முதல் வாசகத்தில் ஆபிரகாமின் மனைவி தமக்கு குழந்தை இல்லை என்பதனால் தம் கணவருக்கு தனது பணிப் பெண்ணை மனைவியாக்குகின்றாள். ஆனால் அப்பெண் தாம் கருவுற்றபின் தமது தலைவியை ஏளனமாக பார்க்கின்றாள். யாரால் அவளுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்பதனை அவள் மறந்து போகின்றாள். அதன் விளைவாக அவள் பல துன்பங்களை அனுபவிக்கின்றாள், இன்று பலர் தம்மை உயர்த்திவிட்டவர்களை மறந்து போய்விடுகின்ற சம்பவங்களை நாம் பார்க்கலாம். ஏற்றிவிட்ட ஏணி அப்படியே நிற்கும். ஆனால் அதன் மீது ஏறியவர்கள் பல வசதிகளுடன் இருப்பார்கள். பலர் தமது குடும்பத்தை முந்நேற்ற பலவகையிலும் கஸ்டப்பட்டார்கள். ஆனால் முந்நேற்றம் கண்டவர்கள் இவர்களை கைவிட்டு விட்டார்கள் என்ற கண்ணீர் கதைகள் எம்மவர் மத்தியில் ஏராளம். எனவே நாம் அவர்களைப்போல் நன்றி மறந்தவர்களாக வாழாமல் எம்மை தூக்கி விட்டவர்களுக்கு உதவ முன் வருவோம். போராட்டங்களின் மத்தியில் கடவுளின் வல்ல செயல்களை நாம் காண்போம்.